டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் ஜுவல்லர்ஸ்
agridoctor.in | 8.12.2024 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 142 - Madurai | Online Edition

## உருவானது காற்றழுத்த தாழ்வு பகுதி!

# 10 மற்றும் 11ம் தேதிகளில் கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, டிச.7

தமிழகத்தில் வருகிற 10 மற்றும் 11ம் தேதிகளில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை மையம் வெளியிட்டுள்ள



அறிக்கையில், தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பூமத்திய ரேகையை ஒட்டிய இந்திய பெருங்கடல் பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, நேற்று (7-12-24) காலை 8.30 மணி அளவில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது. இது இன்று காலை 8.30 மணிக்கு மேல், மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து சற்று வலுவடைந்து, மேலும் இது மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து 11 ஆம் தேதி வாக்கில் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் இலங்கை - தமிழகம் கடற்கரையை நோக்கி நகரக் கூடும். தென்மேற்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென் கிழக்கு அரபிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக இன்றும் நாளையும் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

10-12-24ம் தேதி கடலோர தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்கள், காரைக்கால் பகுதியில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்பு உள்ளது.

11-12-24ல் கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும், உள் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடு துறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# மில்லியனர் ஃபார்மர் ஆஃப் இந்தியா (எம்எஃப்ஓஐ) விருதுகள் 2024

## மதுக்கூர் அத்திவெட்டி கிராம இளம் விவசாயி கார்த்தி பெற்றார்



தஞ்சாவூர், டிச.7

மஹிந்திரா டிராக்டர்ஸ் மில்லியனர் ஃபார்மர் ஆஃப் இந்தியா விருது – 2024 : மில்லியனர் ஃபார்மர் ஆஃப் இந்தியா (எம்எஃப்ஓஐ) விருதுகள் 2024, விழா புதுதில்லியில் உள்ள புசாவில் உள்ள புகழ்பெற்ற ஐஏஆர்ஐ மைதானத்தில் தொடங்கியது.

இந்த வரலாற்று நிகழ்வு முற்போக்கு விவசாயிகளின் குறிப்பிடத்தக்க சாதனைகளை கொண்டாடுகிறது மற்றும் விவசாயத்தில் சமீபத்திய கண்டுபிடிப்புகளை காட்டுகிறது.

கிருஷி ஜாக்ரன் ஏற்பாடு செய்து, இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (ICAR) இணைந்து நடத்துகிறது மற்றும் மஹிந்திரா டிராக்டர்ஸ் நிதியுதவியுடன், மூன்று நாள் நிகழ்வு விவசாயத்தின் எதிர்காலத்தை வடிவமைக்க உலகளாவிய தலைவர்கள், விவசாய முன்னோடிகள் மற்றும் தொலைநோக்கு பார்வை யாளர்களை ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்நிகழ்வில் தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் வட்டாரம் அத்திவெட்டு கிராமத்தை சேர்ந்த முற்போக்கு இயற்கை விவசாயி இளைஞர் கார்த்தி, விழா குழுவினரால் தேர்வு செய்யப்பட்டு டிசம்பர் 1ஆம் தேதி புதுடில்லியில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு பரிசு மற்றும் சான்றிதழ் முன்னாள் மத்திய அமைச்சர் புருஷோத்தம் ரூபலானியின் கையினால் விருது பெற்றுள்ளார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

தமிழகத்திலிருந்து தேர்வு செய்யப்பட்ட 17 விவசாயிகளில் டெல்டா பகுதியில் இருந்து தேர்வு செய்யப்பட்ட இளம் விவசாயி கார்த்தி விருது பெற்றதை மதுக்கூர் வேளாண் உதவி இயக்குனர் திலகவதி மற்றும் வேளாண் துறை அலுவலர்கள் இன்றைய தினம் பாராட்டி சிறப்பித்தனர்.

கார்த்தி, இயற்கை விவசாயத்தின் மூலம் மேலும் பல சாதனைகள் புரிய வாழ்த்து தெரிவித்தனர்.




# மக்காச்சோளப் பயிரில் படைப்புழுத் தாக்குதலை தவிர்ப்பது எப்படி?

மதுரை, டிச.7

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டாரம், தங்களாச்சேரி அம்மாபட்டி ஆகிய பகுதிகளில் மக்காச்சோளப் பயிரில் படைப் புழுத்தாக்குதல் அதிகமாக இருப்பதால் வேளாண்மை உதவி இயக்குனர் மயில், வேளாண்மை அலுவலர் நரேஷ் குமார், வேளாண்மை துணை அலுவலர் ரவிச்சந்திரன், மதுரை, வேளாண்மை அறிவியல் நிலைய இணை பேராசிரியர் சுரேஷ் மற்றும் முன்னோடி விவசாயிகள் இணைந்து வயல் ஆய்வு பணி செய்தனர். புரட்டாசி மற்றும் ஐப்பசி பட்டங்களில் பயிரிட்டு இருந்த வயல்களில் படைப்புழு தாக்குதல் மிக அதிகளவில் காணப் பட்டது. வளர்ச்சி நிலையில் இருக்கும் பயிர்களுக்கு ஏக்கருக்கு 100 மிலி இமாம்மெக்டின் பென்சோயேட் அல்லது 100 மிலி ஸ்பைனிடோரம் மற்றும் ஏக்கருக்கு 5 எண்கள் இனக் கவர்ச்சிப் பொறி விளக்குப்பொறி 1 எண் என்றளவில் பயன் படுத்தி படைப்புழுவை கட்டுப்படுத்த ஆலோசனை வழங்கப்பட்டது.

இனி வரும் காலங்களில் மக்காச்சோள படைப்புழுவை கட்டுப்படுத்த விதைக்கு முன் கோடை உழவு செய்தல் மற்றும் கடைசி உழவின் போது ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு அடி உரமாக இட வேண்டும். வரப்பு பயிராக பயறு வகை, தீவனப்புல், எள், சூரியகாந்தி, சாமந்தி போன்ற பயிர்கள் மூலம் படைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்தலாம். தொடர்ந்து மக்காச்சோளம் பயிரிடுவதை தவிர்த்து பயிர் சுழற்சி முறையில் மாற்று பயிராக பயிர் வகைகள் சாகுபடி செய்யலாம். மேலும் பின் பருவ சாகுபடியினை தவிர்க்க வேண்டும். மானாவாரி நிலங்களில் ஆடி மற்றும் ஆவணி பட்டங்களில் மக்காச்சோள பயிர் சாகுபடி செய்தால் படைப்பு தாக்குதலை தவிர்ப்பதுடன் அதிகமாக மகசூல் பெறலாம் என வேளாண்மை உதவி இயக்குனர் திருமங்கலம் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையம், மதுரை ஆகியோர் கூட்டாக இணைந்து விவசாயி களிடம் விளக்கினர்.

இதற்கான ஏற்பாடுகளை அட்மா வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் திட்ட மேலாளர் புஷ்பமாலா, வேளாண்மை உதவி அலுவலர் ரவிச்சந்திரன் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் — 07.12.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 36 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 30 | 36 | 57 | உருளை (பிற) | 30 | 38 |
| 1B | கத்திரி(Nadu) | 40 | 46 | 57A | உருளை(ஊட்டி) | 32 | 72 |
| 2 | வெண்டை | 45 | 50 | 58 | மேரக்காய் | 20 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 46 | 50 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 35 | 40 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 40 | 46 | 60 | கேரட் | 50 | 60 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 75 | 80 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 65 | 72 |
| 6 | புடலை | 25 | 30 | 62 | நூல்கோல் | 45 | 50 |
| 7 | பீர்க்கன் | 40 | 48 | 63 | டர்னிப் | 45 | 50 |
| 8 | சுரைக்காய் | 25 | 28 | 64 | மு.கோஸ் | 25 | 30 |
| 9 | பாகற்காய் | 30 | 36 | 65 | மு.கோஸ்(கலர்) | 0 | 0 |
| 10 | கொத்தவரை | 40 | 48 | 66 | காளிபிளவர் | 40 | 47 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 110 | 120 |
| 12 | அரசாணி | 18 | 22 | 68 | பூண்டு | 260 | 338 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 30 | 35 | 69 | இஞ்சி | 48 | 100 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 28 | 32 | 70 | புருக்கோலின் | 150 | 170 |
| 15 | சி.வெங்காயம் | 50 | 56 | 71 | பென்னி பீன்ஸ் | 55 | 65 |
| 16 | பெ.வெங்காயம் | 55 | 60 | 72 | குடமிளகாய் | 50 | 54 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 30 | 36 | 73 | ஊட்டி அவரை | 130 | 140 |
| 18 | பச்சை மொச்சை | 60 | 64 | 74 | பஜ்ஜி மிளகாய் | 0 | 0 |
| 19 | முருங்கை | 0 | 0 | 71A | | | |
| 20 | தேங்காய் | 54 | 58 | | | | |
| 21 | மாங்காய் | 55 | 58 | | | | |
| 22 | வாழைக்காய் | 25 | 30 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 42 | 46 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 45 | 55 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 28 | 32 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 38 | 42 | 78 | பப்பாளி | 22 | 26 |
| 28 | கறிவேப்பிலை | 50 | 56 | 79 | மாதுளை | 120 | 160 |
| 29 | கொத்தமல்லி | 38 | 42 | 80 | திராட்சை | 60 | 70 |
| 30 | புதினா | 7 | 8 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 20 | 22 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 20 | 22 | 83 | ஆரஞ்ச் | 40 | 65 |
| 33 | சுக்கிட்டி | 20 | 25 | 84 | சாத்துக்குடி | 70 | 80 |
| 34 | அரைக்கீரை | 20 | 22 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 20 | 22 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 20 | 22 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 45 | 50 |
| 40 | கோவக்காய் | 45 | 50 | 91 | பூவன் | 35 | 38 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 38 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 25 | 28 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 55 | 58 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 45 | 48 | 97 | செவ்வாழை | 70 | 74 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 45 | 48 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 40 | 44 |
| 50 | நிலக்கடலை | 60 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 65 | 75 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 45 | 50 | | | | |
| 55A | துவரை | 60 | 65 | | | | |

# மாசுக்கட்டுப்பாடு விழிப்புணர்வு நிகழ்வில் வேளாண் பல்கலை என்எஸ்எஸ் மாணவர்கள்



கோயம்புத்தூர், டிச.7

தேசிய மாசுக் கட்டுப்பாட்டு தினத்தை முன்னிட்டு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் சார்பாக விழிப்புணர்வு சைக்கிள் பேரணி நேற்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை முனைவர் அ.ரவிராஜ், முதன்மையர் (வேளாண் பொறியியல்) தலைமைதாங்கி கொடியசைத்து துவக்கி வைத்தார்.






சிறப்பு விருந்தினராக P.K.சுந்தரமூர்த்தி, முதன்மை செயல் அலுவலர், சி.இ.ஓ., ஆட்டோ பிரஸ்சிங்ஸ் மற்றும் அட்வைசர், ஞன்டர் டக்ளஸ் இந்தியா சிறப்புரையாற்றி வாழ்த்தி சைக்கிள் பேரணியில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பேராசிரியர்கள், மாணவ பிரதிநிதிகள் மற்றும் நாட்டு நல பணித்திட்ட தன்னார்வலர்கள் சுமார் 400 பேர் விழிப்புணர்வு சைக்கிள் பேரணியில் மாசுக்கட்டுப்பாட்டின் அவசியம் குறித்த பாதகைகளுடன் கலந்து கொண்டனர்.

விழாவுக்கான ஏற்பாடுகளை முனைவர்.வெ.பழனிச்செல்வம், பேராசிரியர் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் மேற்பார்வையில் வேளாண் கல்லூரி மாணவ மாணவிகள் செய்திருந்தனர்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நெற்பயிர்களில் துங்ரோ நச்சுயிரி இலையுறை அழுகல் நோய்

## வேளாண் துறை ஆய்விற்கு பின் ஆலோசனை



மதுரை, டிச.7

மதுரை மாவட்டம் கிழக்கு மற்றும் மதுரை மேற்கு வட்டாரத்திற்கு உட்பட்ட பனைக்குளம், சித்தாக்கூர், குருத்தூர், தேத்தம்பட்டி, ஜோதியபட்டி மற்றும் தோடனேரி, சமயநல்லூர், விட்டங்குளம், வைரவநத்தம், பரவை பிட்2 ஆகிய கிராமங்களில் பயிரிடப்பட்ட நெற்பயிர்களில் துங்ரோ நச்சுயிரி, இலையுறை அழுகல், பாக்டீரியா இலைக்கருகல் நோய் தாக்குதல் தென்படுகிறது. இது குறித்து விவசாயிகள் வேளாண்மைத் துறை அலுவலகத்தில் தெரிவித்தனர். அதன்படி மதுரை அரசு வேளாண்மைக் கல்லூரி நோயியல் துறை பேராசிரியை பே.மாரீஸ்வரி மற்றும் பூச்சியியல் துறை இணைப் பேராசிரியர், கி.சுரேஷ், வேளாண் இணை இயக்குநர், ப.சுப்புராஜ், வேளாண் உதவி இயக்குநர் ப.பால முருகன், வேளாண்மை அலுவலர், ம.கனிமொழி, துணை வேளாண்மை அலுவலர் பெ.வரதராஜன் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் சுந்தரகிருஷ்ணன், ஜெ.காதர் உசேன் மற்றும் வெ.பிரபு ஆகிய வேளாண் அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வுக்குப் பின்பு பேராசிரியர்கள் கூறுகையில் ஆல்கல் (Algal parasite) நோய் பாதிக்கப்பட்ட நெல் வயல்களில் ஆல்கல் பாசிப் படலம் மண்ணில் மிகுந்து காணப்பட்டது. இதனால் நெற்பயிர்கள் வளர்ச்சி குன்றியும், காய்ந்தும் காணப்பட்டது. இவ்வகை பாசிப்படலம் மண்ணில் படர்வதால் வேர்கள் தேவையான சத்துக்களை எடுத்துக் கொள்ள முடியாமல் வளர்ச்சி தடைபடுகிறது. வெப்பநிலை மிகக் குறைந்தும், காற்றில் ஈரப்பதம் மிகுதியாக இருப்பதால் பாசிப் படலம் அதிகமாக தென்பட்ட வயல்களில் துங்ரே நச்சுயிரி பாதிப்பு அதிகமாகவும், பாசிப்படலம் குறைவாக தென்பட்ட வயல்களில் அதாவது கதிர்கள் உருவான வயல்களில் இலையுறை அழுகல் மற்றும் பாக்டீரியல் இலைக்கருகல் நோய் அதிகமாகவும் காணப்பட்டது.

ஆகவே இவ்வகையான நோய்கள் பாசிப்படலம் படிந்த வயல்களில் மிகுதியாக இருப்பதால் இதனைக் கட்டுப்படுத்து வதற்கு அதிக தூர்கட்டும் பருவத்தில் காப்பர் சல்பேட் ஏக்கருக்கு 1 கிலோ என்றளவில் 1 கிலோ மணலில் கலந்து நெல்வயலில் விசிறிவிட வேண்டும். துங்ரோ நச்சுயிரி நோய் பச்சை தத்துப் பூச்சியினால் பச்சை தத்துப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த இமிடா குளோபிரிட் மருந்தை 0.5 மிலி / 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். பாக்டீரியல் இலைக் கருகல் மற்றும் இலையுறை அழுகல் நோயைக் கட்டுப்படுத்த காப்பர் ஆக்ஸி குளோரைடு மருந்தை ஏக்கருக்கு 500 கிராம் என்றளவில் 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து தெளிக்க வேண்டும்.

நெல் வயல்களில் நோய்கள் தீவிரமாக பரவுவதற்கு முக்கிய காரணம் வயல் வரப்புகள் மற்றும் வயல்களில் களைகள், களைகளை எடுத்து மிகுந்து காணப்படுவதால் தான். எனவே அவ்வப்போது வயல் வரப்புகளை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.



# வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்ட விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் - மக்காசோள படைப்புழுவை கட்டுப்படுத்த விழிப்புணர்வு

மதுரை, டிச.7

மதுரை மாவட்டம், சேடபட்டி வட்டாரத்தில் மேலதிருமாணிக்கம் உட்கடை ஆத்தாங்கரைபட்டியில் கிராமத்தில் நடைபெற்ற விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் மக்காசோள படைப்புழுவை கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய முன்னேற்பாடு மற்றும் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் பற்றி வேளாண் அறிவியல் நிலைய பூச்சியியல் பேராசிரியர் சுரேஷ் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. மதுரை, சேடபட்டி வேளாண்மை உதவி இயக்குநர் இரா.இராம சாமி, கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட வயலினை பார்வையிட்டு மருந்து தெளித்து கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. வேளாண்மை அலுவலர் மணிமேகலை கலந்து கொண்டு மத்திய மாநில திட்டங்கள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது.




இயற்கை விவசாயி காமேஷ் கலந்து கொண்டு மண்மாதிரி எடுக்கும் விதங்கள் மற்றும் பதினாறு சத்துக்கள் பற்றியும் பஞ்ச காவியம் தயாரிப்பு மற்றும் மண்புழு உரம் தயாரிப்பு பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. தொழில்நுட்ப மேலாளர் கணேச ராஜா அட்மா திட்டத்தை பற்றி எடுத்துரைத்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் பிரித்திவிராஜன், உதவி வேளாண்மை அலுவலர்கள் காமேஸ், மகேஸ்குமார் ஏற்பாடுகளை செய்திருந்தனர். பின்னர் சேடபட்டி வட்டாரத்தில் டி.இராமநாதபுரம், திருமாணிக்கம் மற்றும் வண்டபுலி கிராமங்களில் மக்காசோள படைப்புழு தாக்குதல் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வில் சேதராம் விளைவிக்கும் நிலைக்கு குறைவாகவே தாக்குதல் காணப்பட்டது. முன்னேற் பாடாக ஸ்பைனிடோரம் 100 மில்லி அல்லது இமாம்மெக்டின் பென்சோயேட் 100 கிராம் தெளிக்குமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# சவுக்கு ஒரு மரப்பயிர் மட்டுமல்ல ஒரு பணப்பயிரே



நாம் சிறுவர்களாக இருந்த போது சவுக்கு செடியின் இலையை பிடுங்கி அதில் ஒரு கணுவை எடுத்து மற்றொரு கணுக்குள் நுழைத்து விளையாடி இருப்போம். அந்த செடி தான் சவுக்கு இது பள்ளிகளிலும் தோட்டங்களிலும் கல்லூரிகளில் வரப்பு ஓரங்களில் வேலியாக நடப்பட்ட இந்த மரப்பயிர் தற்போது காகித ஆலைக்கு (PAPER MILL) தேவையான முக்கிய மூலப்பொருளாக வும் அதிக கலோரி வெப்பம் தரக்கூடிய எரிய பொருளாகவும் இந்த சவுக்கு பயன்படுகிறது. இது ஒரு அன்னிய நாட்டு மரம் ஆங்கிலேயர் களால் நமது நாட்டு கொண்டு வரப்பட்டது.






சவுக்கு இதனுடைய அறிவியல் பெயர் (CASURINA) இது கசுவரினேசியே என்ற தாவரக் குடும்பத்தை சேர்ந்தது இதனுடைய தாயகம் தெற்காசியா மற்றும் பசிபிக் தீவுகள் மற்றும் ஆஸ்திரேலியாவை கொண்டது. இதில் 17 வகையான மரங்கள் உள்ளன. 40 மீட்டர் வரை உயரம் வளரக்கூடியது. கடற்கரையோரங்களில் உள்ள நிலங்களுக்கு மண் அரிமானத்தை தடுக்க காற்று தடுப்பானாக சவுக்கு மரங்கள் நடப்படுகின்றன.

**காகித ஆலைகளுடன் ஒப்பந்த சாகுபடி எப்படி?**

காகித உற்பத்திக்கு தேவையான கூழ் சவுக்கு மரத்தில் இருந்து மூலப் பொருளாக உள்ளது. இதனுடைய தேவைகள்

இருந்து மூலப் பொருளாக உள்ளது. இதனுடைய தேவைகள் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே இருக்கிறது. புள்ளி விவரங்களுடன் சொல்ல வேண்டுமானால் ஒரு நாளைக்கு 3500 டன் மரங்கள் தேவைப்படுகின்றன. இதற்கான சவுக்கு சாகுபடி செய்யும் விவசாயிகளுடன் காகித ஆலைகள் (சேசாயி ஆலை, புகளூர் காகித ஆலை) ஒப்பந்தம் செய்ய படுகிறது. சவுக்கு மரங்களில் நைட்டிஜன தக்க வைக்கும் (பிராங்கியா) FRANKIA SPECIES) வேர்முடிச்சுகளை கொண்டு அவை நைட்டிஜனை தக்க வைத்து மண்ணின் வளத்தினை அளவை கூட்டுகிறது.

இத்தகைய மரங்களை நாற்று மூலமாகவும் நடவு செய்யப் படுகின்றது. இது நல்ல வருமானத்தை அள்ளி தரக்கூடிய ஓருவகை மரப்பயிர்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில்

## இம்மாத பயிற்சிகளின் நிகழ்ச்சி நிரல்

| வ. எண் | தலைப்பு மற்றும் இடம் | நாள் |
|---|---|---|
| 1. | பழங்கள் மற்றும் காய்கறிகளில் சாகுபடி மேலாண்மை மற்றும் அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள்<br>**இடம்** – வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாச்சலம் | 10.12.24 |
| 2. | தென்னையில் ரூகோஸ் வெள்ளை ஈ மேலாண்மை<br>**இடம்** – இரங்கநாதபுரம் | 10.12.24 |
| 3. | கால்நடைவளர்ப்பு, தீவனப்பயிர்கள் உற்பத்தி மற்றும் பராமரிப்பு முறைகள் | 11.12.24 |
| 4. | வேளாண்மையில் வங்கிகளின் பங்கு<br>**இடம்** – வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாச்சலம் | 12.12.24 |
| 5. | வேளாண் இயந்திரங்களின் பராமரிப்பு மற்றும் பயன்பாடுகள்<br>**இடம்** – வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாச்சலம் | 13.12.24 |
| 6. | கூட்டு இன மீன் வளர்ப்பு<br>**இடம்** – வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாச்சலம் | 16.12.24 |
| 7. | உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் மேலாண்மை மற்றும் தொழில்முனைவோர் பயிற்சி<br>**இடம்** – வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாச்சலம் | 17.12.24 |
| 8. | மகளிர் தொழில்முனைவோர்களான மதிப்பு கூட்டுதல் பயிற்சி<br>**இடம்** – திட்டக்குடி | 17.12.24 |
| 9. | கால்நடை வளர்ப்பு, தீவனப்பயிர்கள் உற்பத்தி மற்றும் பராமரிப்பு முறைகள்<br>**இடம்** – பரவலூர் | 18.12.24 |

10. மணிலாவில் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள்
**இடம்** – எடகொண்டான்பட்டு 19.12.24

11. கால்நடை வளர்ப்பு, தீவனப்பயிர்கள் உற்பத்தி மற்றும் பராமரிப்பு முறைகள்
**இடம்** – சத்தியவாடி 20.12.24

12. முந்திரி பயிரில் சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் மதிப்பு கூட்டுதல் பயிற்சி
**இடம்** – வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாச்சலம் 20.12.24

13. காளான் வளர்ப்பு பயிற்சி
**இடம்** – வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாச்சலம் 24.12.24




14. கால்நடை வளர்ப்பு, தீவனப்பயிர்கள் உற்பத்தி மற்றும் பராமரிப்பு முறைகள்
**இடம்** – ஆழிச்சிக்குடி 24.12.24

15. மீன் வளர்ப்பு
**இடம்**– வள்ளியம் 26.12.24

16. பயறுவகை பயிர்களில் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள்
**இடம்** – மேமாத்தூர் 27.12.24

17. கரும்பில் படரும் கொடி மேலாண்மை
**இடம்** – நடுவீரப்பட்டு 30.12.24

இதனை நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
IS 4985 : 2021
BIS
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# விதைகளை பரிசோதிக்க விவசாயிகளுக்கு அழைப்பு

திருவண்ணாமலை, டிச.7

தற்பொழுது திருவண்ணாமலை மாவட்டத்தில் அதிக மழை பெய்துள்ளதாலும், கார்த்திகை பட்டம் தொடங்கி இருப்பதால் விவசாயிகள் தங்களிடம் உள்ள நெல் விதைகள் ADT 37, ADT 45 மற்றும் மணிலா, உளுந்து விதைகளை விதைப்பிற்கு முன் விதைகளின் தரத்தினை பரிசோதனை செய்து கொள்ளலாம். விதைகளை பரிசோதனை செய்வதன் மூலம் இடுபொருட்கள் செலவினை குறைத்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும். குறைந்த செலவில் அதிக மகசூல் பெற விதைபரிசோதனை செய்தபின் விதைகளை பயன்படுத்துவதன் மூலம் விதைகளின் முளைப்புதிறன் குறைபாடு இல்லாமல் இருப்பதையும் விதைகளில் பிற இரக விதைகள் உள்ளதா என்பதை அறிவதன் மூலம் கலப்பு விதைகள் பயன்படுத்துவதை தவிர்க்கலாம். மேலும் விதையின் ஈரப்பதம் மற்றும் சுத்தத்தன்மை ஆகியவற்றை அறிந்து பயன்படுத்துவதன் மூலம் பயன்படுத்தும் விதைகள் முளைக்க தரமானதா என்பதை தெரிந்துகொள்ளலாம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு விதைப்பரிசோதனை நிலையத்தில் விவசாய பெருமக்கள் தங்களிடம் உள்ள விதைகளை அனுப்பி அவற்றின் ஈரப்பதம், பிற இரக கலவன், முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் பூச்சி நோய் தாக்குதல் ஆகியவற்றை பரிசோதனை செய்து அதன் பின்பு விதைப்பு செய்து அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. விதை மாதிரிகளை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். விதைகளை அனுப்பும் போது பயிரின் பெயர், இரகம் மற்றும் குவியல் எண் ஆகியவை குறிப்பிட்ட விண்ணப்ப படிவத்துடன் ஒரு மாதிரிக்கு ரூ.80/- வீதம் விதைப் பரிசோதனைக் கட்டணம் சேர்த்து அனுப்புதல் வேண்டும். விதை மாதிரிகளை மூத்த வேளாண்மை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், டாங்காப் கட்டிடம், வேங்கிக்கால், திருவண்ணாமலை 606 604 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

# அட்மா திட்டத்தில் பண்ணைப்பள்ளி

திருச்சி, டிச.7

திருச்சி மாவட்டம், இலால்குடி வட்டாரத்தில் வீ.வளவனூர் கிராமத்தில் மிகச் சன்ன இரக நெல் சாகுபடி பற்றிய பண்ணை பள்ளி நடைபெற்றது. இதில் இரா.வடிவேல், வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) கலந்து கொண்டு உலக மண் தினம் பற்றிய விழிப்புணர்வு, மண்வளத்தை காக்கும் முறைகள், காப்பதில் அவசியம் எதிர்கால சந்ததியர்களின் பாதுகாப்பு பாரம்பரிய இயற்கை முறை விவசாயம் அங்கங்க இடுப்பொருட் களின் பயன்பாடு ஆகியவற்றை பற்றி விவசாயிகளுக்கு இடையே

ARJUN® TARPAULINS SINCE 1989
Always the Best
ARJUN® TARPAULINS



• PVC Coated/HDPE Tarpaulins • Poultry Curtains • Pond Liners
• Tents • Cars/scooter Covers • Shade Nets
• Azolla Beds • Vermi Beds

ARJUN TARPAULIN INDUSTRIES
EXPERTS WHO KNOW TARPAULINS BEST
Contact us : 94422 12345, 94861 12345
www.arjuntarpaulins.com info.arjun@gmail.com
Arjun Towers, 47, Rajaji Road, Near Hotel Windsor Castle, Salem - 636007, Tamil Nadu, South India

விவரித்துக் கூறினார். பின்னர் கௌசல்யா, வேளாண்மை அலுவலர் பேசுகையில் வேளாண்மைத் துறை சார்பில் செயல் படுத்தும் மானிய திட்டங்கள், இடுபொருட்கள் பற்றி விரிவாக விளக்கி கூறி விவசாயிகள் பெற்றுக் கொள்ள கேட்டுக் கொண்டார்.



துணை வேளாண்மை அலுவலர் அய்யா சாமி, பசுந்தாள் பயிர்கள் விதைப்பு பற்றி கூறினார். வேளாண்மை கல்வி நிலையம் சார்பில் Dr.சிவரஞ்சனி மண்ணியல் பேராசிரியர் பேசுகையில் மண் பரிசோதனையின் அவசியம் குறித்தும் மண்வள அட்டையில் குறிப்பிட்ட பற்றுள்ள சத்துக்கள் நுண்ணூட்டச் சத்துக்கள் இரண்டாம் நிலை சத்துக்கள் மண்ணின் தன்மை ஆகியவற்றை எடுத்துக் கூறினார். அதன் பின்பு மண் பரிசோதனை எடுக்கும் முறைகள் செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. அதனை ஆய்வு செய்ய மண் பரிசோதனை நிலையம் காஜாமலை, திருச்சி மண் மாதிரியுடன் ரூ.15/- கட்டணம் அளித்தும் மண் மாதிரி, நீர் பரிசோதனை செய்து அதன் அடிப்படையில் உர மேலாண்மை செய்து மண் வளம் காக்க வேண்டும் என்று கூறினார். அதன் பிறகு வேளாண்மை உதவி இயக்குநர் பேசுகையில் வேளாண்மை உதவி அலுவலர் ராஜசேகரன் பேசுகையில் வேளாண்மைத் துறையில் திரவ வடிவில் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, துத்தநாக சல்பேட் பயன்படுத்தும் முறைகள் பற்றி விரிவாக விளக்கி கூறினார். அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சபரிசெல்வன் அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்து விரிவாக விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். இப்பண்ணை பள்ளியில் வீ.வளவனூர் கிராம முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இதற்கான ஏற்பாட்டினை ராஜ சேகரன், உதவி வேளாண்மை அலுவலர், முன்னோடி விவசாயி ராஜாராம், உதவி தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக் ஆகியோர் செய்து இருந்தனர். இப்பண்ணை பள்ளியில் லால்குடி வட்டார உதவி வேளாண்மை அலுவலர்கள் சந்திரசேகர், எடிசன், பிரவின், உதவி தொழில்நுட்ப மேலாளர் தமிழ்மணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கன்னடம்பட்டி கிராமத்தில் நிலக்கடலை பண்ணை பள்ளி நடைபெற்றது



திண்டுக்கல், டிச.7

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டாரம், அட்மா திட்டத்தின் கீழ் கன்னடம் பட்டி கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் சந்திரமோகன், ஆலோசனைப்படி நிலக்கடலை பண்ணை பள்ளி நடைபெற்றது. இதில் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிலைய முதுநிலை ஆராய்ச்சியாளர் டாக்டர் செல்வமுகிலன் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு கடலை சாகுபடி முறை அதன் பராமரிப்பு முறை பற்றி எடுத்துக் கூறினார்.




கடலை பண்ணை பள்ளி நான்காம் வகுப்பு முத்து பிரியா, தோட்டத்தில் 25 கடலை விவசாயிகள் சேர்ந்து இப் பயிற்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் களை எடுக்கும் பருவத்தில் ஜிப்சம் இட்டு மண்ணை அணைத்தால் அதன் மூலம் விழுதுகள் அதிகம் இறங்கும் மகசூல் அதிகம் கிடைக்கும் என எடுத்து கூறப்பட்டது. இப்பயிற்சியில் உதவி தோட்டக்கலை அலுவலர் சக்திவேல் மற்றும் ராஜா ஆகியோர் துறை சார்ந்த திட்டங்கள் பற்றி கூறினர். உதவி வேளாண்மை அலுவலர் சரவணன் கலந்து கொண்டு அப்பகுதி கடலை விவசாயிகளை ஒருங்கிணைத்து பெரிதும் உதவினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.®
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நெற்பயிரில் வயல் சூழல் ஆய்வு திடல் வேளாண்மை துணை இயக்குநர் ஆய்வு



புதுக்கோட்டை, டிச.7

புதுக்கோட்டை வட்டாரம், செம்பாட்டூர் கிராமத்தில் அமைக்கப் பட்டுள்ள வயல் சூழல் ஆய்வு திடலினை வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) பொ.செல்வி ஆய்வு செய்தார். ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு என்றால் சுற்றுப்புற சூழல் பாதிக்காமல் பயிர்களை தாக்கும் பூச்சிகள் அல்லது நோய்களை கட்டுப்படுத்த இயற்கையுடன் இயைந்த பல முறைகளான உழவியல் முறைகள், கைவினை முறைகள் உயிரியல் முறைகள் மற்றும் இரசாயன முறைகளை ஒரு சேர ஒருங்கிணைத்து பயிரின் அந்தந்த பரு தேவைக்கேற்ப உரியவாரு கையாண்டு குறைந்த செலவில் பயிரை பாதுகாத்து, நிறைந்த நல் விளைச்சலை ஈட்டுவதே ஆகும். அதாவது பூச்சி அல்லது பூஞ்சாண கொல்லிகள் என்ற ஒரே ஆயுதத்தை தவிர்த்து ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை களை கடைபிடிப்பதே ஆகும். அவ்வாறு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடித்திட தேவையான முடிவுகளை எடுத்திட அடிப்படையாக அமைவது தான் வயல் சூழல் ஆய்வு (Agro Eco System Analysis) என்பதாகும்.

நெற்பயிரின் வளர்ச்சி மற்றும் உற்பத்தி ஆகியவை நெல் வயலின் சூழலை பொருத்தே தீர்மனமாகும். வயல் சூழல் என்பது வெளிக் கூறுகளான சூரிய ஒளி, மேக மூட்டம், காற்றின் வேகம், பனி, மழை போன்றவை மற்றும் நிலக்கூறுகளான மண்ணின் ஈரம், மண்ணின் தன்மை, மண் வளம் போன்றவற்றையும் உயிர் கூறுகளான தீமை செய்யும் பூச்சிகள் நோய் காரணிகள், களைகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியவையாகும். பயிர் சூழலில் காணப்படுகின்ற உயிர் கூறுகள், பயிரை தாக்கும் தீமை செய்யும் பூச்சிகள் அவற்றை உண்டு வாழ்ந்து நமக்கு நன்மை செய்யும் நன்மை பூச்சிகள் இவற்றை தவிர மண்ணை மட்கச் செய்யும் பூச்சிகள், மகரந்த சேர்க்கைக்கு உதவும் தேனீக்கள் போன்ற நடுநிலை பூச்சிகள் போன்றவற்றை கொண்டிருக்கின்றன. இவ்வுயிர்களின் வளர்ச்சி, பெருக்கம் முதலியன வெளிக்கூறுகள், நிலக்கூறுகள் மற்றும் பயிரின் வளர்ச்சி பருவத்தை சார்ந்து இருக்கின்றன. இப்படிப்பட்ட பயிர் சூழலில் காணப்படுகின்ற பல்வேறு கூறுகளும் பயிர் வளர்ச்சி பருவத்திற்கேற்ப சாதகமாக உள்ளனவா என்ற ஆய்வு செய்து

ஆய்வின் முடிவிற்கேற்ப நிர்வாக முடிவுகளை எடுத்து சரியான தருணத்தில் செயல்படுத்தும் பட்சத்தில் உயர் விளைச்சல் பெறலாம். இத்தகைய திடலினை வயல் சூழல் ஆய்வு மாதிரி திடலை அமைத்து இதன் பயன்கள் மற்றும் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து விவசாயிகளிடம் வேளாண்மை துணை இயக்குநர் (ம/தி) எடுத் துரைத்தார். மேலும் புதுக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சு.அன்பரசன் நெற்பயிரில் காணப்பட்ட பூச்சி நோய்க் கான கட்டுப்பாட்டு வழிமுறைகளை வழங்க, திடலினை வேளாண்மை அலுவலர் த.ஸ்வர்ணா அமைத்திருந்தார்.



# சத்தியமங்கலம் வட்டாரத்தில் கலைஞர் கிராமத்தில் வயல் விழா



ஈரோடு, டிச.7

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டாரம் வேளாண்மை – உழவர் நலத்துறை (அட்மா) வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் (முளையஜபுஜா-ழளவாளை)வயல் விழா கோணமூலை கிராமத்தில் 6.12.24 அன்று காலை 10 மணி அளவில் நடத்தப்பட்டது. இதில் சத்தியமங்கலம் வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) சரோஜா, வேளாண்மை அலுவலர் (மா.நி.ப) கற்பகம், துணை வேளாண்மை அலுவலர் வீரதினேஸ்கர் மற்றும் பவானிசாகர் வேளாண் அறிவியல் நிலையம் விஞ்ஞானி சத்தியசீலன், உதவி செயற்பொறியாளர் ராஜேந்திரன் மற்றும் தோட்டக்கலை உதவி அலுவலர் ஜெயராம் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) சரோஜா, தலைமை உரையாற்றினார்.

மேலும் வேளாண்மை அலுவலர் கற்பகம் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் பற்றியும் கூறினார். உழவன் செயலி பற்றி அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர்கள் நந்தினி, வீரமணி ஆகியோர் விளக்கமாக கூறினார். கூட்டத்திற்கு வந்திருந்த விவசாயி களுக்கு உழவன் செயலியை பதிவிறக்கம் செய்தும் அதன் பயன்பாடுகள் குறித்தும் விளக்கமாக கூறினார் மற்றும் வேளாண்மை உதவி அலுவலர் கோகிலா, மாநில திட்டங்கள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கமாக கூறினார்.

மேலும் மண் மாதிரி எடுக்கும் முறைகள் குறித்தும், மண்ணின் நயம் மற்றும் சுண்ணாம்புத் தன்மையை அறிந்தும் மண்ணில் உள்ள சத்துக்களின் அளவை அறிந்தும் பயிருக்கேற்ப உரமிடலாம் எனவும் விவசாயிகளுக்கு விளக்கமாக கூறினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

# மழைக்காலங்களில் பூச்சி மற்றும் நோய் பராமரிப்பு முறைகள்

மழைக்காலங்களில் நெல் பயிர்களில் பூச்சி மற்றும் நோயின் அறிகுறிகள் காணப்பட்டால், கீழ்க்கண்ட பயிர் பாதுகாப்பு முறைகளைக் கையாள வேண்டும் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி விவசாயிகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

**குருத்துப்பூச்சி** : முட்டைக் குவியல் தென்படும் சமயத்தில் முட்டை ஒட்டுண்ணி டிரைகோகிரம்மா ஜப்பானிக்கம் ஏக்கருக்கு 2 சி.சி. அளவில் தொடர்ந்து 2 முறை ஒரு வார இடைவெளியில் விடவும்.

**இலைச்சுருட்டுப் புழு** : பொருளாதார சேத நிலையான வளர்ச்சிப் பருவத்தில், 10 சதவீதம் பாதித்த இலைகளும், பூக்கும் தருணத்தில் 5 சதவீதம் பாதித்த இலைகளும் காணப்பட்டால், குளோரிபைரிபாஸ் 20 இசி 500 மில்லி / ஏக்கர் (அ) குளோரோட்டேரேனிலிபுருள் 18.5 எஸ்.சி. 60 மில்லி / ஏக்கர் (அ) புளுபெண்டிமைட் 39.35 எஸ்சி 20 மில்லி / ஏக்கர் தெளிக்கவும். விளக்குப் பொறியில் அந்துப்பூச்சிகள் கவரப்படும்போது டிரைகோகிரம்மா கிலோனிஸ் ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 2 சி.சி. அளவில் தொடர்ந்து 3 முறை ஒரு வார இடைவெளியில் விடவும்.



**கூண்டுப்புழு :** நடவு வயலில் 1 லிட்டர் மண்ணெண்ணெயை 3 கிலோ மணலுடன் கலந்து சமமாகத் தூவியபின், ஒரு கயிற்றை வயலின் இரு ஓரங்களிலும் இருவர் பயிரின் பாதி உயரத்தில் பிடித்துக் கொண்டு நடந்தால், கூண்டுப்புழுக்கள் அனைத்தும் வயலில் உள்ள நீரில் விழுந்து அழிந்துவிடும்.

**புகையான் :** ஒரு தூருக்கு ஒரு தத்துப்பூச்சி என்ற பொருளாதார சேத நிலையில் இருந்தால், இமிடாகுளோபிரிட் 17.8 எஸ்.எல். 50 மிலி., ஏக்கர் அல்லது பைப்ரினில் 5 எஸ்.சி 500 மி.லி., ஏக்கர் தெளிக்கவும்.

**பச்சை தத்துப்பூச்சி :** குத்துக்கு 5 தத்துப்பூச்சிகள் தழைப் பருவத்தில் (அ) பூக்கும் பருவத்தில் 10 தத்துப்பூச்சிகள் / குத்து என்ற பொருளாதார சேத நிலையில் இருந்தால், இமிடா குளோபிரிட் 17.8 எஸ்.எல். 50 மிலி / ஏக்கர் அல்லது பைப்ரினில் 5 எஸ்.சி., 500 மிலி / ஏக்கர் தெளிக்கவும்.




**குலைநோய் :** குலைநோயின் பாதிப்பு தென்பட்டால், ஏக்கர் ஒன்றுக்கு சூடோமோனாஸ் எதிர் உயிர் பாக்டீரியா 1 கிலோ அல்லது கார்பெண்டாசிம் 200 கிராம் அல்லது டிரைசை குளோசோல் 200 கிராம் என்ற பூஞ்சாண மருந்தை 200 லிட்டர் நீரில் கலந்து, கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும்.

**பக்டீரியல் இலைகருகள் :** நோயின் அறிகுறி காணப்பட்டவுடன் தழைச்சத்து உரம் இடுவதைத் தவிர்க்க வேண்டும். மேலும் 20 சதவீதம் பசுஞ்சாணக் கரைசல் அதாவது 40 கிலோ புதிய சாணத்தை 100 லிட்டர் நீரில் கரைத்து, 12 மணிநேரம் ஊறவைத்து பின்பு, தெளிந்த நீரை வடித்து இத்துடன் 100 லிட்டர் நீரை கலந்து 200 லிட்டராக்கி தெளிக்கவும் அல்லது ஏக்கருக்கு சூடோமோனாஸ் 1 கிலோ அல்லது ஸ்ட்ரெப்டோமைசீன் சல்பேட்டுடன் டெட்ராசைக்கிளரின் கலந்த மருந்துக் கலவை 120 கிராமுடன், காப்பர் ஆக்ஸி குளோரைடு 300 கிராம் என்ற அளவில் நீருடன் கலந்து 15 நாள்கள் இடைவெளியில் இருமுறை தெளிக்க வேண்டும்.


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com